டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே

# இன்று மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்

**சென்னை**

சென்னை அண்ணாசாலை டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் இன்று தொடங்கப்படுகிறது.

சென்னையில் அடுத்தகட்டமாக அண்ணாசாலை, டிஎம்எஸ், சென்ட்ரல் வழியாக வண்ணாரப்பேட்டை வரை 9.5 கி.மீ தூரம் சுரங்கப்பாதை வழியாக மெட்ரோ ரயில் பணிகள் நிறைவடைந்துள்ளன.

## இறுதிகட்டப் பணிகள்

டிஎம்எஸ், ஆயிரம் விளக்கு, எல்ஐசி, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை சென்ட்ரல், உயர் நீதிமன்றம், மண்ணடி மற்றும் வண்ணாரப்பேட்டையில் மெட்ரோ ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின்தடங்கள் அமைத்து, சிக்னல் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் பணிகள் தற்போது நடந்துக் கொண்டிருக்கின்றன. இறுதியாக மேற்கொள்ளப்பட்ட மின் இணைப்பு பணிகளும் நிறைவடைந்துள்ளன. இதற்கான பல்வேறு கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், இந்த தடத்தில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் இன்றுதொடங்கப்படுகிறது. அடுத்த சில வாரங்களுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கி ஆய்வு நடத்தப்படும். அதன்பிறகு, ரயில்வே பாதுகாப்பு ஆணையரின் ஒப்புதல் பெற்று, வரும் ஜனவரியில் மெட்ரோ ரயில் சேவையை தொடங்க மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

## சேவையில் மாற்றம்

டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில்சேவை தொடங்குவதற்கான சிக்னல் பரிசோதனை (டெஸ்சிங்) பணிகள் வரும் 7-ம் தேதி முதல் 22-ம் தேதி வரையில் நடக்கின்றன. இதனால், சின்னமலை - டிஎம்எஸ் இடையே காலை 6 மணிக்கு புறப்பட வேண்டிய மெட்ரோ ரயில் சேவைக்கு பதிலாக மேற்கண்ட நாட்களில்காலை 8 மணிக்கு தொடங்கும். ஆனால், விமான நிலையம் - சின்னமலை, பரங்கிமலை - சென்ட்ரல், விமான நிலையம் - சென்ட்ரல் வழித்தடத்தில் எந்த பாதிப்பு இன்றி வழக்கம்போல் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். இவ்வாறு மெட்ரோ நிறுவன செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.